அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

ஜூலை - 2024 | மரம் - 3 | கன்று - 7 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

பிள்ளைகளே,
உங்கள் பெற்றோருக்கு
எல்லாக் காரியத்திலேயும்
கீழ்ப்படியுங்கள்; இது
கர்த்தருக்குப் பிரியமானது.

கொலோசெயர் 3:20



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...



அன்பிற்குரிய **ஒலிவமரக் கன்றுகள்** வாசகர்கள் மற்றும் அன்புக் குழந்தைகளே! இந்த இதழ் வழியாக உங்களுடன் இணைந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இயன்றவரை சிறுவர் குழாமின் ஆசையை நிறைவு செய்யும் வகையில் படைப்புகளை தயார் செய்திருக்கிறேன். இறையரசின் விழுமியங்களை தாங்கி நிற்கும் இவ்விதழ் வாசிக்கும் உங்கள் அனைவருக்கும் நிறைவான ஆசீர் உண்டாக வாழ்த்துகிறேன்.

ஒருமுறை, பரலோக இராஜ்ஜியம் பற்றிய போதனையை மக்களுக்கு இயேசு கிறிஸ்து வழங்கிக்கொண்டிருக்கும் போது, வைத்த கண் வாங்காமல் இயேசுவின் சொற்களை மக்களெல்லாரும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருக்கின்ற அந்த வேளையில், பெற்றோர் சிலர் தங்கள் சிறு குழந்தைகளோடு இயேசுவை அணுகி வருகின்றனர். தம் பிள்ளைகள்மேல் கைகளை வைத்து இயேசு அவர்களுக்கு ஆசி வழங்க வேண்டும் என அப்பெற்றோர் வேண்டுகின்றனர். இயேசுவின் சீஷர்களுக்கோ தாங்க முடியாத எரிச்சல்! சிறுபிள்ளைகள் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டும், விளையாட்டுத்தனமாய்ப் பேசிக்கொண்டும் இருந்தால் இயேசுவின் சொற்களை மக்கள் கேட்பது கடினமாகும்; போதனை திசை திருப்புதலுக்கும் வாய்ப்பாக அமையும். அது மட்டுமல்ல, இயேசு போதிக்கின்ற இடத்தில் குழந்தைகளுக்கு என்ன வேலை? பெரியவர்கள் கூடியிருந்து உரையாடும் வேளையில் சிறுபிள்ளைகள் அங்கே நுழைந்தால் குழப்பம்தானே! எனவே அச்சிறுபிள்ளைகளையும் அவர்களைக் கூட்டி வந்தவர்களையும் பார்த்து இயேசுவின் சீஷர்கள் முறுமுறுக்கின்றனர்; அங்கிருந்து போய்விடுமாறு அவர்களை அதட்டுகின்றனர். இதைக் கண்ட இயேசுவின் கவனம் அக்குழந்தைகள்மீது திரும்புகிறது. அவரது பார்வையில் குழந்தைகளும் வயதில் முதிர்ந்தோரும், பெற்றோரும் பிள்ளைகளும் எல்லாருமே சமம்தான். யாரையும் ஒதுக்கிவைக்கின்ற போக்கு இயேசுவுக்குக் கிடையாது. எனவே இயேசு ''சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்'' என்கிறார். இயேசுவின் பார்வையில் இருந்த சமூக தெளிவு வியப்பளிக்கிறது.

தேவனின் முன்னிலையில் அனைவரும் சமமே என்பதுதான் தேவ குமாரனாகிய இயேசு நமக்கு வழங்குகின்ற போதனை. அன்றைய சமுதாயத்தில் சிறுபிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் உரிமைகள் இருக்கவில்லை. இன்றும்கூட சில இடங்களில் இதே நிலைதான். அனைவரையும் கைகளை விரித்து வரவேற்கின்ற சமுதாயம் உருவாக வேண்டும். மனிதரை உயர்ந்தவர் தாழ்ந்தவர், சிறியவர் பெரியவர் என வேறுபடுத்திப் பிரித்து, சம நீதி வழங்க மறுக்கின்ற சமுதாயம் மறைந்து, புதிய உலகம் உதித்திட வேண்டும்.



தொடர்ந்து, இதழை வாசியுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். இதழின் உள்ளே நீங்கள் நுழைவதற்கு வசதியாக முன்னுரையை நிறைவு செய்கின்றேன். உங்களுக்காக எனது அன்பும் ஜெபமும் எப்போதும் உண்டு. வாழ்க.

அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# சீரகம் (Cumin seeds)


அறிவியல் பெயர்: **Cuminum Cyminum**
குடும்பம்: **Apiaceae**

**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி... (மத்தேயு 23:23)** இவ்வசனத்தில் இஸ்ரவேல் மக்கள் சீரகத்தை தசமபாகமாக செலுத்தியுள்ளதை தெரிந்து கொள்ளலாம்.

**சீரகம்** என்பது Apiaceae குடும்பத்தில் ஒரு பூக்கும் வருடாந்திர மூலிகை தாவரமாகும். வட இந்தியாவில் மலைப்பகுதிகளில் அதிகம் பயிர்செய்யப்படுகிறது. தமிழகத்தில் மேட்டுப்பாங்கான இடங்களிலும் மலைப்பகுதிகளிலும் பயிர்செய்யப்படுகிறது. இத்தாவரத்தின் காய்ந்த விதைகளே சீரகம் எனப்படும்.

உலக அளவில் கிட்டத்தட்ட 90 சதவீதம் சீரகம் இந்தியாவில் தான் உற்பத்தி ஆகிறது. பண்டைய காலம் முதல் சீரகம் உணவில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வரும் நறுமணப்பொருள். உலகிலேயே மத்திய தரைக்கடல் உணவு முறையிலும், தெற்கு ஆசியாவின் உணவு முறையிலும் தான் சீரகம் மருந்துப்பொருளாக உணவில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. நமது பாரம்பரியம் ‘உணவே மருந்து’ கோட்பாட்டை கொண்டது என்பதற்கு இதுவே உதாரணம். நோய் தீர்க்கும் மருந்தாக, உடலை காக்கும் அமிர்தமாக, அதிகம் பயன்படுத்துவது நம் நாட்டு மருத்துவத்தில் தான்.

20-30 செ.மீ உயரத்தை எட்டும் மெல்லிய, கிளைத்த தண்டுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிளைக்கும் இரண்டு முதல் மூன்று துணைக்



கிளைகள் உள்ளன. நன்றாகப் பிரிக்கப்பட்ட நூல் போன்ற இலைகளைக் கொண்டிருக்கும், இது சிறிய வெள்ளை அல்லது இளஞ்சிவப்பு அல்லது வெள்ளை பூக்களை உருவாக்குகிறது, அவை நறுமண விதைகள் கொண்ட நீளமான பழங்களுக்கு வழிவகுக்கின்றன. கருப்பு சீரகம், வெள்ளை சீரகம் மற்றும் பழுப்பு சீரகம் போன்ற மாறுபாடுகளுடன், ஒவ்வொன்றும் தனித்துவமான சுவைகள் மற்றும் பயன்பாடுகளை வழங்குகின்றன.



சீர் + அகம் = சீரகம். அகத்தை சீர் செய்யும் தன்மையுடையது. உடலுள் பாதிக்கப்பட்டு இருக்கும் உள்ளுறுப்புக்களை சீராக்கி, மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டுவரும். மேலும் சித்த மருத்துவம் ‘பித்த நாசினி’, ‘போசனக் குடாரி’ என்றெல்லாம் அடைமொழியிட்டு சீரகத்தை அழைப்பது சிறப்பு.



வயிறு சார்ந்த உபாதைகள் என்றதுமே நம் நாட்டினர் தேடுவது அஞ்சறைப்பெட்டியில் உள்ள சீரகத்தை தான். தண்ணீருக்கு பதிலாக சீரகத்தண்ணீர் குடிக்கும் பழக்கம் இன்று நம்மில் பலருக்கு உண்டு. நாம் உணவில் சாதாரணமாக பயன்படுத்தும் சீரகத்தை அறிவியல் அடிப்படையிலும் உற்றுப்பார்க்கையில் ஆச்சர்யப்படுத்தும் வண்ணம் பல்வேறு மருத்துவ குணங்களை உள்ளது.

பொன்னிறமான நிறத்தில் உள்ள சீரகம் லேசான காரமும், இனிப்பும் கலந்த சுவை உடையது. இதனை லேசாக வறுத்து பயன்படுத்த ‘பித்த நோய்கள்’ அனைத்தும் வராமல் காக்கும் என சித்த மருத்துவம் கூறுகின்றது.



அதிகரித்த பித்தம், காமாலையும், குடலில் புண்ணையும், தோலில் அழற்சியையும், கண்ணில் எரிச்சலையும், மூட்டுகளில் வீக்கத்தையும் இன்னும் பல நோய்களையும் உண்டாக்கும் என்கிறது சித்த மருத்துவம். சீரகமானது பித்தத்தை சீராக்கி குளிர்ச்சியைத் தரவல்லது. ஆதலால் தான் பித்தம், பித்த வாந்தி, தலைசுற்றல் போன்ற பித்தம் தொடர்பான குறிகுணங்கள் என்றதுமே முதலில் வீட்டு வைத்தியமாய் பழகி வருவது ‘சீரகத் தண்ணீர்’ தான்.



நாட்பட்ட அசீரணக் கோளாறால் பாதிக்கப்பட்டவர்கள் சீரகத்தை பொடித்து வெண்ணெயில் அல்லது நெய்யில் கலந்து உணவுக்கு முன் எடுத்துக்கொள்ள வயிற்றுப்புண் ஆறும். சீரண மண்டலம் சீராகும். பித்தம் குறைந்து, குடல் சுத்தமடையும். உணவில் சேர்க்கப்படும் சீரகம், உணவு கெட்டு நஞ்சாவதை தடுப்பதாகவும் உள்ளது.

வாந்தியை கட்டுப்படுத்த சீரக தண்ணீரில் நாட்டுச்சர்க்கரை கலந்து கொடுக்கும் பழக்கம் இன்றும்

உள்ளது. வயிற்றுப்போக்கிற்கு சீரகத்தை கருக வறுத்து கசாயம் இட்டு கொடுக்கும் பழக்கம் இன்றும் பல கிராமங்களில் வழக்கு முறையாக உள்ளது.

வயிற்றுப்புண் ஆற்ற முட்டை வெண்கருவுடன், சீரகம் அரை தேக்கரண்டி, சிறிது இந்துப்பு சேர்த்து காலை வெறும் வயிற்றில் எடுத்துக்கொள்ள புண் ஆறும். சித்த மருத்துவத்தில் வயிற்று புண் ஆற்றும், அசீரணம் போக்கும் பெரும்பாலான மருந்துகளில் சீரகம் சேருவது குறிப்பிடத்தக்கது. சீரக சூரணம், ஏலாதி சூரணம், பஞ்ச தீபாக்கினி சூரணம் ஆகியன அவற்றில் சில. சீரகத்தில் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் உள்ளன. இது உடலுக்குள் நுழைந்து உங்களை நோய்வாய்ப்படுத்தும் பாக்டீரியாக்களை அழிக்கிறது. சீரகம் வயிற்று வலிக்கு மருந்தாக கருதப்படுகிறது.

சீரகத்தை தண்ணீருடன் அவ்வப்போது கொதிக்க வைத்து குடித்து வர உடலில் கொழுப்பின் அளவு குறைந்து உடல் எடை குறையும். சீரகம் வயிறு மற்றும் குடல் சார்ந்த புற்றுநோய்களை வராமல் தடுக்கும்.

சீரகத்தின் மருத்துவ செயல்பாட்டிற்கு மிக முக்கிய வேதிப்பொருள் 'குமினால்டிஹைடு' என்று நவீன அறிவியல் கூறுகின்றது. மேலும் சீரகத்தின் விதைகள் ஊட்டச்சத்து நிறைந்தவையாக உள்ளன. புரதம் மற்றும் நார்ச்சத்துக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. நமது தினசரி நார்ச்சத்து தேவையில் நான்கில் ஒரு பங்கு ஒரு கிராம் சீரகத்தில் உள்ளது. பொட்டாசியம், வைட்டமின்கள் பி மற்றும் ஈ மற்றும் பல அத்தியாவசிய தாதுக்கள், குறிப்பாக இரும்புச்சத்து, சீரக விதைகளில் கணிசமாக உள்ளன. மேலும் வைட்டமின் ஏ மற்றும் சி உள்ளதால் சீரகம் எடுத்துக்கொள்வது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதாகவும் உள்ளது.

அதிக ரத்த அழுத்த நிலையில் சீரகத்தை எலுமிச்சை சாற்றில் ஊற வைத்து உலர்த்திப்பொடித்து பயன்படுத்தினால் நல்ல பலனைத்தரும். சீரகத்தை தொடர்ந்து எடுத்துக்கொள்ள உடலில் எச்.டி.எல் எனும் கெட்ட கொழுப்பு குறைந்து எல்.டி.எல் எனும் நன்மை பயக்கும் கொழுப்பு அதிகமாவதை ஆய்வு முடிவுகள் உறுதி செய்வதால், சீரகம் இருதய நோயாளிகளுக்கும் ஆயுளை விருத்தி செய்யும்.

நீரிழிவு வியாதியிலும் சீரகம் நல்ல பலனை அளிக்கக்கூடியது. சீரகத்துடன் கொத்தமல்லி விதையான தனியாவை 500 மி.கி. அளவு சேர்த்து தயாரிக்கும் தேநீர் இன்சுலின் செயல்பாட்டை மூன்று மடங்காக அதிகரிக்கும்படியாக உள்ளதை வெளிநாட்டு நூல்கள் கூறுகின்றன. இது சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைக்க உதவும்.

வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், சிறுநீர் எரிச்சல், கல்லடைப்பு, இருமல், வாய்ப்புண், வாயு தொல்லை, மலச்சிக்கல் போன்ற பல உடல் உபாதைகளுக்கும் சீரகம் மருந்தாக பயன்தரும் என்று சித்த மருத்துவம் கூறுகின்றது.

சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பை கற்களையும் கரைக்க வல்லதாகவும், கண் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணவும் கூட சீரகத்தில் மருத்துவ நன்மைகள் நிறைந்துள்ளன.

ஆரோக்கிய நாடுகளின் வரிசைப்பட்டியலில் இந்தியா பின்தங்கி இருக்கிறது. மருத்துவ குணம் வாய்ந்த சீரகத்தை அன்றாட உணவில் அதிகம் பயன்படுத்த துவங்கினால், டென்மார்க், நார்வே, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை பின்னுக்கு தள்ளி ஆரோக்கிய நாடுகள் பட்டியலில் நாம் முன்னிலை பிடித்து உலகிற்கே முன்னுதாரணமாய் திகழ முடியும்.

மருத்துவப் பண்புகளைக் கொண்டிருக்கும் மூலிகையான சீரகத்தை குறித்து விழிப்புணர்வு உண்டாகவும், சீரகம் தடையின்றி உற்பத்தியாகவும் ஜெபிப்போம்.

தொடர்கதை

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..



‘ஒருவழியாக ஒரு மிகப்பெரிய தொல்லை இன்றுடன் தீர்ந்தது. இனிமேல் பிரச்சினையில்லை. நாம் இழந்துபோன பெயரும் புகழும் இனிமேல் நமக்கு திரும்பவும் கிடைக்கும்.’

‘அவன் பின்னால் சென்ற மனிதர்களையும் நாம் சும்மா விடக்கூடாது. அவர்களையும் நாம் ஏதாவது செய்ய வேண்டும்.’

‘அதெல்லாம் எதற்கு? அவன் செத்ததும் அந்த கூட்டம் காணாமலேயே போய்விட்டது. இனிமேல் அந்தக் கவலை நமக்கு வேண்டாம். அவனுடைய சீடர்கள் சாதாரணமானவர்கள், அவர்களுக்கு ஆற்றலோ, திறமைகளோ எதுவும் கிடையாது. எனவே அவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் இனிமேல் தங்கள் வேலையைப் பார்க்கப் போய்விடுவார்கள். மீன் பிடிக்கவோ, வரி வசூலிக்கவோ.’ சிரிப்பொலிகள் அலைந்தன.

‘அது சரிதான்...’

‘நம்முடைய திட்டம் கனகட்சிதம்... அதுவும் பரபாசையா, இயேசுவையா யாரை விடுதலை செய்யவேண்டும் என்று இராஜா கேட்டபோது ஒரு வினாடி பயந்துவிட்டேன். எங்கே மக்கள் இயேசுவைக் கேட்பார்களோ என்று. நல்லவேளை நாம் கூட்டத்தைச் சரியாகக் கட்டுப்படுத்திவிட்டோம்.’

அவர்கள் ஆனந்தமாய் உரையாடிக் கொண்டிருந்தார்கள். தங்கள் முதுகை அழுத்திக் கொண்டிருந்த தேவையில்லாத ஒரு பாரம் இறங்கிப் போன நிம்மதி அவர்களிடம் தெரிந்தது.

'எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது.'

'என்ன?'

'இயேசு உயிருடன் இருந்தபோது, மூன்றாவது நாளில் உயிர்த்தெழுவேன் என்று சொல்லியிருந்ததாய் ஞாபகம்.'

'அவனாவது உயிர்த்தெழுவதாவது... அதைப்பற்றியெல்லாம் ஏன் கவலைப்படுகிறாய்? அதெல்லாம் நடக்காது.'

'நடக்காது என்பது தான் என் நம்பிக்கையும்... ஆனால்'

'என்ன ஆனால்..'

'ஒருவேளை அந்த சீடர்கள் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டு போய் ஒளித்து வைத்துவிட்டு இயேசு உயிர்த்தார் என்று கதை கட்டலாம் அல்லவா?'

அவன் சொன்னதும் எல்லோரும் நிமிர்ந்தார்கள்.

'அப்படி நடந்தால். அது மிகப்பெரிய எழுச்சியை மக்களிடையே உண்டாக்கிவிடும். இயேசு உண்மையிலேயே தேவன் தான் என்று மக்கள் கூட்டம் நம்பிவிடவும் வாய்ப்பிருக்கிறது இல்லையா?'

'அட... ஆமாம். அதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படியானால் நாம் உடனே இராஜாவிடம் போய், அந்தக் கல்லறையைக் காவல் காக்க ஏற்பாடு செய்யவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?'

'கண்டிப்பாக...' அவர்கள் நேராக பிலாத்துவிடம் ஓடினார்கள்.

'மன்னா... இயேசுவைக் கொன்றது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால்... ஒரு விண்ணப்பம்.'

'என்ன விண்ணப்பம்' பிலாத்துவின் குரலில் எரிச்சல் தெரிந்தது. இயேசு குற்றமில்லாதவர் என்றும் இந்தக் கூட்டத்தினரின் பொறாமை தான் அவரைக் கொன்றது என்றும் பிலாத்து அறிந்திருந்தான். எனவே அந்தக் கூட்டத்தினரைப் பார்ப்பதையே வெறுத்தான். முதலில் இயேசுவைக் கொல்லவேண்டும் என்று உயிரை வாங்கினார்கள், பின் யூதருடைய ராஜா என்ற பெயர்ப் பலகைக்கு பிரச்சினை செய்தார்கள். இப்போது என்ன பிரச்சினையோடு வந்திருக்கிறார்கள்?

'இராஜா.. அந்த இயேசு உயிரோடு இருந்தபோது இறந்தாலும் மூன்றாவது நாளில் உயிர்ப்பேன் என்று சொல்லியிருந்தான்.'

'சரி.. அதற்கென்ன இப்போது? அவர் உயிர்த்தால் பார்த்துக் கொள்ளலாம்.'

'அதில்லை இராஜா. அவனுடைய சீடர்கள் இயேசுவின் உடலை எடுத்து எங்கேயாவது போட்டு விட்டு அவன் உயிர்த்துவிட்டான் என்று கதை கட்டிவிடலாம் அல்லவா.'

'நீங்கள் என்ன சொல்லவருகிறீர்கள் என்று புரியவில்லை' பிலாத்து கேட்டான்.

'இராஜா.. இந்த மூன்று நாட்களும் அந்தக் கல்லறையைக் காவல் காக்கவேண்டும். மூன்று நாளில் உயிர்த்தெழுவேன் என்பது தான் அவனுடைய பேச்சு. எனவே மூன்று நாட்கள் மட்டும் காவலுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதே எங்கள் விண்ணப்பம்.'

'உங்களிடமே வீரர்கள் உண்டே. அவர்களைக் கொண்டு நீங்கள் காவல் புரியுங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்' பிலாத்து எரிச்சல் குறையாமல் பேசினான்.

‘உங்கள் அனுமதிக்கு நன்றி அரசே’ கூட்டத்தினர் கலைந்தனர்.

உடனே சென்று காவல் சேவகர்களை ஏற்பாடு செய்தனர். காவல் சேவகர்கள் இயேசுவின் கல்லறைக்குச் சென்று அவருடைய உடல் கல்லறையில் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்தினார்கள். பின் கல்லறையை மூடி அதை சங்கிலிகளால் பொருத்தி சீல்வைத்தனர். இரண்டு காவலர்கள் அந்தக் கல்லறை வாசலில் கண்விழித்துக் காவல் இருந்தார்கள்.

ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாளில், திடீரென ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. கர்த்தருடைய தூதர் வானத்திலிருந்து இறங்கி வந்து, கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி, அதன்மேல் உட்கார்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும், அவருடைய ஆடை உறைந்த மழையைப்போல வெண்மை போன்றும் இருந்தது. அவரைக் கண்ட அச்சத்தால் காவலாளர் நடுக்கமுற்றுச் செத்தவர் போலாயினர்.

வாரத்தின் முதல் நாள் காலையில் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு, அவர் முதலில் மகதலேனா மரியாளுக்குத் தோன்றினார். அவரிடமிருந்துதான் அவர் ஏழு பிசாசுகளை துரத்தியிருந்தார்.

முதல் நாள் விடியற்காலையில், இருள் நீங்கும் முன்பே, மகதலேனா மரியாள், யாக்கோபின் தாய் மரியாள், யோவன்னாள், சலோமே என்பவர்களும், அவர்களோடு இருந்த வேறு சில பெண்களும், தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப் பொருள்களை எடுத்துக் கொண்டு கல்லறைக்குச் சென்றார்கள். ‘‘கல்லறை வாயிலிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்?’’ என்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் கேட்டுக் கொண்டார்கள்.

கல்லறைக்கு வந்த பெண்கள் நிமிர்ந்து உற்றுநோக்கியபொழுது, கல்லறை வாயிலிருந்து கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அது பெரியதொரு கல். அவர்கள் உள்ளே நுழைந்தபோது அங்கே ஆண்டவர் இயேசுவின் உடலைக் காணவில்லை. அதைக் குறித்து அவர்கள் குழப்பமுற்றார்கள்.

தொடரும்...

## நாய்கள் ஜாக்கிரதை

இந்தியாவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்த நாய்க்கடி சம்பவங்கள், தொடர்ந்து அதிகரித்து வருவது கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி, உலகிலே நிகழும் அதிக ரேபிஸ் இறப்புகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இதில், 30 முதல் 60 சதவீதம், 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாகும். இந்தியாவில், நாய் கடித்து உண்டாகும் ரேபிஸ் நோயால் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர்.

சுகாதார அமைச்சகம் மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் 2023-ல் 27,59,758 பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், தமிழ்நாட்டில் மட்டும் 2023-ல் 4,04,488 பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெருகிவரும் தெரு நாய்களை கொல்லாமல், அவைகளை பிடித்துச் சென்று கருத்தடை செய்து வந்தாலே அதன் எண்ணிக்கையை குறைக்கலாம். நாய்களின் எண்ணிக்கையை குறைத்தால் மட்டுமே பொதுமக்களும், பள்ளி மாணவ மாணவிகளும், தெருவில் விளையாடும் குழந்தைகளும் அச்சமின்ற பாதுகாப்பாக நடமாட முடியும். இதற்காக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

# படமும் பாடமும்

எருசலேமின் குமாரத்திகளே!
கேதாரின் கூடாரங்களைப்போலவும்,
சாலொமோனின் திரைகளைப்
போலவும், நான் கறுப்பாயிருந்தாலும்
அழகாயிருக்கிறேன்.
உன்னதப்பாட்டு 1:5



அவர் என்னைப் புல்லுள்ள
இடங்களில் மேய்த்து, அமர்ந்த
தண்ணீர்கள் அண்டையில் என்னைக்
கொண்டுபோய் விடுகிறார்.
சங்கீதம் 23:2



உன் வழியைக் கர்த்தருக்கு
ஒப்புவித்து, அவர்மேல்
நம்பிக்கையாயிரு; அவரே
காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.
சங்கீதம் 37:5




கர்த்தர் நல்லவர் என்பதை
ருசித்துப்பாருங்கள்;
அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற
மனுஷன் பாக்கியவான்.
சங்கீதம் 34:8



# அழகு ஆமை!

அழகான ஆமையின் படத்தைப் பார்த்து நீங்களே வரையுங்கள் குழந்தைகளே.





# ஆமை



''தரையில் ஊருகிற பிராணிகளில் உங்களுக்கு
அசுத்தமானவைகள் எவையெனில்:
பெருச்சாளியும், எலியும், சகலவிதமான
**ஆமையும்**'' (லேவி. 11:29). இதில், தேவன்
புசிக்கக்கூடாது என்று சொன்ன ஊர்வன பட்டியலில் ஆமை இருப்பதை காணலாம்.

**ஆமை** ஊர்வன இனத்தைச் சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். ஆமைகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று நிலத்தில் வாழ்வன. மற்றொன்று நீரில் வாழ்வன. ஆனால் இவ்விரண்டு வகை ஆமைகளும் இருவாழ்விகள் தான் (Amphibians). ஆமைகள் குளிர் இரத்த விலங்குகளாகும். அதாவது இவற்றின் உடல் வெப்பநிலையை சூழலுக்கு ஏற்ப இவற்றால் மாற்றிக்கொள்ள முடியும். ஆமைகள் நிலத்திலும், நன்னீரிலும், கடலிலும், உவர்நீரிலும் வாழக்கூடியது. பொறுமையாகவும், நிதானமாகவும் செயல்படுகிற ஆமைகள் பூமியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது. சிலர் வீடுகளில் செல்லப்பிராணியாக வளர்க்கின்றனர். முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் வகையைச் சேர்ந்தவை இந்த ஆமையினங்கள். ஆமைக்கு உருப்படக்கி, கூர்மம், கச்சபம், கமடம், கல்லி போன்ற வேறு பெயர்கள் உண்டு.

மணிக்கு சுமார் 70 மீட்டர்தூரம் வரை மட்டுமே ஊர்ந்துசெல்லக்கூடியது. இவற்றின் உடலில் முதுகுப்புறம் உள்ள தனித்துவமான குருத்தெலும்பு ஓடு ஒரு கவசம் போல் செயல்படுகிறது. எதிரிகளால் ஆபத்து என்றால் வேகமாக ஓட முடியாத ஆமைகள் உடனே தலையையும் நான்கு கால்களையும் ஓட்டுக்குள் இழுத்துக்கொள்கின்றன. ஆமைகளின் இதயம் மெதுவாகத் துடிக்கின்றது. இதனால் இதன் ஆயுட்காலமும் அதிகம்.

கடலாமையின் வழித்தடத்தை பின்பற்றியே கடல் வழிகளை, கடல் நீரோட்டத்தை தமிழர்கள் கண்டறிந்தனர். அப்படி ஒரு வழிதான் பர்மாவுக்கு தனுஷ்கோடிக்கும் உள்ள பாதை. பர்மாவில் தேக்கு மரங்களை வெட்டி கடலில் போட்டால் அது 15 நாட்களில் கடல் நீரோட்டத்தில் தனுஷ்கோடியை வந்தடையும் என்று கடலாமைகள் மூலம் கண்டறிந்தவர்கள் தமிழர்கள். ஆமையை செல்வத்தின் அடையாளமாக பண்டைய தமிழர்கள் பார்த்தனர். கடலின் நீரோட்டத்தையும், காந்த அலைகளையும் நினைவில் வைத்துக் கொண்டு ஆமைகள் பயணம் மேற்கொள்வதாக சமீபத்தில் ஆய்வு மூலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெகுதொலைவுக்கு படகுகளை விரைவாக செலுத்தும் கலையை சோழர்கள் தாங்களாக வளர்த்து கொண்டதற்கு வழிகாட்டியாக இருந்தவைகள் கடல் ஆமைகள்.

### நில ஆமை (Tortoise):

நில ஆமை (Tortoise) என்பது நிலத்தில் வாழும் ஆமை வகையாகும். இதுவே உலகில் நீண்ட காலம் வாழும் நில விலங்கு ஆகும். பெரும்பாலான நில ஆமை இனங்கள் சராசரியாக 80 முதல் 100 வயது வரை வாழ்பவையாக கருதப்படுகின்றன. நிலத்தில் வாழும் ஆமைகள் ஊர்ந்துசெல்வதற்கு ஏதுவாக கால்களில் நகங்கள் இருக்கிறது.

ஆமைகளால் நன்றாகப் பார்க்கவும் வாசனையை மோப்பம் பிடிக்கவும் முடியும். இலைகள், புற்கள், பூக்கள், பழங்கள் போன்ற தாவர உணவுகளை விரும்பிச் சாப்பிடுகின்றன. தாவரங்களை மென்று தின்பதற்கு ஏற்றவாறு வலிமையான தாடைகள் ஆமைகளுக்கு அமைந்துள்ளன. ஆனால் பற்கள் கிடையாது. அவை வாழும் இடத்தில் மிக நேர்த்தியாக விதைப் பரவல்களைச் செய்கின்றன. ஓர் ஆமை ஒரு செடியைச்

சாப்பிட்டுவிட்டு, சுமார் அரை மைல் தூரம் சென்று தன் உடற்கழிவை வெளியேற்றுகின்றது. அந்தக் கழிவில் வெளியேறும் விதைகளின் மூலமாக அங்கும் அந்தத் தாவரம் முளைத்துக் கிளைவிடத் தொடங்கும்.

பெரும்பாலான நில ஆமை இனங்கள் 30 முட்டைகள் வரை இடுகின்றன. இரவுப் பொழுதில் முட்டையிட்ட பிறகு பெண் ஆமைகள் அவற்றை மணல், மண் மற்றும் கரிமப் பொருள் ஆகியவற்றைக் கொண்டு மூடிவிடுகின்றன. அதன் இனத்தைப் பொறுத்து, குஞ்சு பொரிக்க 60 முதல் 120 நாட்கள் வரை ஆகும். ஆமைக்குஞ்சுகள் முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவந்தவுடன் ஆரம்பத்தில் பூச்சிகள், புழுக்கள் போன்றவற்றை சாப்பிட்டு புரதச்சத்தைப் பெற்றுக்கொள்கின்றன. ஓரளவு வளர்ந்த பிறகு தாவர உணவுகளை மட்டும் எடுத்துக்கொள்கின்றன. சின்னஞ்சிறிய ஆமைகளைச் சாப்பிடுவதற்காகப் பறவைகளும், விலங்குகளும், மனிதர்களும் காத்திருக்கிறார்கள். இத்தனை ஆபத்துகளையும் கடந்து மிகக் குறைவான ஆமைகளே உயிர் பிழைக்கின்றன.

**கடல் ஆமை (Turtle):**

Turtle என்பது கடலில் வாழும் ஆமை வகை. உலகம் முழுவதும் சுமார் 356 வகையான கடல் ஆமை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏழு ஆமை இனங்கள் உலகெங்கிலும் உள்ள கடல்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த ஆமைகளின் மேலோட்டின் வடிவத்தைக் கொண்டு இந்த இனங்கள் பிரித்தறியப்படுகின்றன. இந்தியக் கடற்பரப்பில் ஐந்து வகைகள் காணப்படுகின்றன. அவை பேராமை, சித்தாமை, அழுங்காமை, தோணி ஆமை, பெருந்தலை ஆமை ஆகியவை.

நீரில் வாழும் ஆமைகளுக்கு கால்களே அவைகள் நீந்துவதற்கு ஏற்றவாறு துடுப்புபோல் செயல்படுகின்றன. நிலத்தில் வாழும் ஆமைகளைவிட நீரில் வாழும் ஆமைகள் பெரும்பாலும் உருவத்தில் பெரிதாக இருக்கின்றன. கடல் ஆமைகளில் சில 150 வருடம்வரை கூட உயிர் வாழும். பேராமை (Leatherback) என்ற கடல் ஆமை 900 கிலோ எடை வரை வளரும் தன்மை கொண்டது. கடலில் வாழும் ஆமை வகைகளின் கால்களே துடுப்பு போன்று அமைந்திருக்கும். பெரும்பாலான நேரம் நீருக்கடியில் இருந்தாலும் மூச்சு விடுவதற்காக அவை நீருக்கு மேலே அவ்வப்போது வந்தாக வேண்டும். இனத்தைப் பொறுத்து ஒரு ஆமையால் ஒரு நிமிடம் முதல் ஒரு மணி நேரம் நீருக்கடியில் இருக்க முடியும்.

வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கடல் ஆமைகள் கடலில் கழித்தாலும் கடல் ஆமைகள் முட்டையிடுவதற்காகப் பல ஆயிரம் கிலோ மீட்டர் பயணித்து முட்டையிடும்






இடத்தை அடைகின்றன. ஒரு பெண் ஆமை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் முட்டையிடும். இதில் ஆச்சரியமான அம்சம் என்னவென்றால், ஒரு பெண் ஆமை எந்தக் கடற்பகுதியில் பிறந்ததோ, அதே கடற்பகுதியில்தான் முட்டையிடுகிறது. ஆமைகள் 50லிருந்து 200 முட்டைகள் வரை இடும். பெண் ஆமைகள் கடல் நீரிலிருந்து வெளியேறி மணற்பாங்கான இடத்தில் துடுப்புகளின் உதவியால் சின்னச் சின்ன குழிகளைத் தோண்டி முட்டையிடுகின்றன. இடப்பட்ட முட்டைகளை மண்ணால் மூடிவிட்டு ஆமைகள் சென்றுவிடுகின்றன. பெண் ஆமை முட்டைகளை பாதுகாக்காது. இவை சூரிய வெப்பத்தினால் இயற்கையாக அடைகாக்கப்பட்டு 60 நாட்களுக்குப் பிறகு இரவு வேளைகளில் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளியேறும். பின்னர், மிக வேகமாக கடலை நோக்கி ஓடும். இவ்வாறு கடலை நோக்கிச் செல்லும் குஞ்சுகள், நண்டுகள் மற்றும் கடல் பறவைகள் போன்ற உயிரினங்களின் தொல்லைகளுக்கு இலக்காகும் வாய்ப்புக்கள் அதிகமாய் உள்ளன. அவ்வாறே, கடலுக்குள் சென்ற பின்னர் அங்கு வாழும் பெரிய மீன்களாலும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களாலும் கூட இந்த குஞ்சுகளுக்கு ஆபத்துக்கள் ஏற்படும். இந்த ஆபத்துக்களையும் தாண்டி அவை தொடர்ச்சியாக நீந்திச் செல்லும். கடல் ஆமைக்குஞ்சுகள் வளர்ச்சியடைந்து பருவமடைய 30 ஆண்டுகள் வரை செல்லும். 1000 ஆமைகளில் ஒன்றுதான் பல்வேறு தடைகளைத் தாண்டி முதிர்ந்த பருவத்தை அடையும்.


கடல் ஆமைகள் கடித்து வெளியேற்றும் புற்களும் இலைகளும் வெவ்வேறு உயிரிகள் உண்ணத்தகுந்த சிறு உணவாகின்றன. பவளப்பாறைகளில் உள்ள கடற்பஞ்சுகளை உண்டு, அவற்றில் சிறிய கடல்வாழ் உயிரினங்கள் வந்து உணவருந்தவும் இனப்பெருக்கம் செய்யவும் இளைப்பாறவும் பெருமளவு உதவுகிறது. கடலில் ஜெல்லி மீன்கள் அளவுக்கதிகமாகப் பெருகினால் பிற மீனினங்களைத் தின்று அழித்துவிடும். ஜெல்லி மீன்களின் எண்ணிக்கையைக் கடல் ஆமைகள் குறைக்கிறது. அவை இறக்கும் மீன்களைச் சாப்பிட்டு விடுவதால்தான் ஏரி, குளங்கள், ஆறுகள் நாற்றம் அடிக்காமல் சுத்தமாக இருக்கின்றன. முட்டையிடுவதற்காகக் குழி தோண்டுவதன் மூலமாகப் பூச்சிகள், முயல்கள், நிலத்தில் குழிதோண்டி வாழும் ஆந்தைகள் என்று சுமார் 350 வகையான உயிரினங்கள் ஆமைகளின் உதவியோடு தமக்கான வாழ்விடத்தை ஏற்படுத்திக்கொள்கின்றன. இவ்வாறு ஆமைகள் கடலின் இயற்கைச் சூழல் கெடாமல் பாதுகாக்கின்றன.

இறைச்சிக்காகப் பிடித்தல், முட்டைகளை உணவுக்காக அப்புறப்படுத்துதல், ஆமைகளின் மேலோட்டுகளுக்காக அவற்றைக் கொல்லுதல், மீனவர்களால் தவறுதலாகப் பிடிக்கப்படுதல், கரைக்கு முட்டையிடும் ஆமைகள் படகு மற்றும் வலையில் சிக்கி இறத்தல், அதன் வாழ்விடங்கள் அழிக்கப்படுதல் போன்ற காரணங்களால் ஆமை இனங்கள் அழிந்து வருகின்றன.


ஆமைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அண்மை காலமாக ஆமைக்குஞ்சுகளை கடற்கரையோரத்தில் பார்த்தால் அவற்றை கடலில் விட வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. விலங்குகள் மற்றும் பறவைகளிடமிருந்து பாதுகாக்க, கடற்கரை மணல் பரப்பில் ஆமைகள் இடும் முட்டைகளை வனத்துறையினர் மற்றும் ஆமைகள் பாதுகாப்பு இயக்கத்தினர் சேகரித்து ஆமை குஞ்சுகள் பொரிப்பகத்தில் வைத்து குஞ்சு பொரிக்க வைத்து கடலில் விடுகின்றனர்.

ஆமைகள் பல்லுயிர் ஆதார உயிரினமாகப் பார்க்கப்படுகின்றன. அதாவது, ஆமைகள் அழிக்கப்பட்டாலோ, எண்ணிக்கையில் மிகவும் குறைந்தாலோ, அந்தச் சூழல் மண்டலமே நிலைகுலைந்து போவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஆமைகள் இருந்தால்தான் கடல் சூழல் மண்டலம் ஆரோக்கியமாக விளங்க முடியும். இயற்கை சூழலுக்கு பெரிதும் உதவும் ஆமைகள் அழிக்கப்படாமல் இருக்கவும், மக்களுக்கு ஆமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படவும் ஜெபிப்போம்.


# புத்திசாலியான ஆமை முட்டையிடச் செல்வதற்கு அதற்கு சரியான வழிகாட்டுங்கள்.



# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. - யோவான் 10:27




உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். - எபிரெயர் 3:13




அதை (புத்தியை) வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய். - நீதிமொழிகள் 2:4-5




அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. - எபிரெயர் 10:23



# சுத்தமான நாகமான்

**2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரம் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. நாகமான் எந்த தேசத்தின் படைத்தலைவன்?
2. மகா பராக்கிரமசாலியாகிய நாகமானுக்கு என்ன வியாதி இருந்தது?
3. நாகமான் தன் குதிரைகளோடும் தன் இரதத்தோடும் வந்து பார்த்த தீர்க்கதரிசியின் பெயர் என்ன?
4. எலிசா நாகமானை, யோர்தானில் எத்தனை தரம் ஸ்நானம்பண்ணச் சொன்னார்?
5. தமஸ்குவின் இரண்டு நதிகளின் பெயர்.
6. தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரனின் பெயர் என்ன?
7. யோர்தான் நதி எந்த தேசத்தில் உள்ளது?
8. நாகமான் யோர்தான் நதியில் ஸ்நானம்பண்ணவுடன் அவன் மாம்சம் எதைப்போல மாறிற்று.
9. நாகமான் கேயாசிக்கு என்ன பொருட்கள் கொடுத்தான்?
10. இஸ்ரவேலின் ராஜா சீரிய ராஜா கொடுத்த நிருபத்தை வாசித்தபோது, என்ன செய்தான்?

விடைகள் 23ஆம் பக்கம் பார்க்கவும்

# நாகமான்

சீரிய நாட்டின் படைத்தலைவன் நாகமான். அவன் மகா பராக்கிரமசாலியான வீரன். ராஜா அவரிடம் மிகவும் மரியாதை செலுத்தியிருந்தான். ஆனால் பாவம்! அவன் ஒரு குஷ்டரோகி.

குஷ்டரோகிகள் ஊருக்கு வெளியே வாழ்ந்து வந்த காலத்தில், அரசவையிலேயே நாகமான் இருந்தான் என்றால் அவன் எந்த அளவுக்கு ராஜாவின் மரியாதையைப் பெற்றிருந்தான் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு முறை நாகமான் இஸ்ரவேல் நாட்டில் தாக்குதல் நடத்தியபோது அங்கிருந்து ஒரு சிறுமியைக் கூட்டி வந்திருந்தார். அந்தச் சிறுமியைத் தனது மனைவிக்கு வேலைக்காரியாக்கி இருந்தார். ஒரு நாள் அந்தச் சிறுமி தலைவியிடம் சொன்னாள்.

''இஸ்ரவேல் நாட்டில் ஒரு தீர்க்கதரிசி இருக்கிறார். அவரிடம் போனால் தலைவருக்கு சுகம் கிடைக்கும்''.

சிறுமியின் குரலில் இருந்த உறுதி தலைவிக்கு உற்சாகத்தைக் கொடுக்க, அவள் நாகமானிடம் அதைச் சொன்னாள். நாகமான் உடனே ராஜாவிடம் சென்று விஷயத்தைச் சொன்னான். ராஜாவும் மகிழ்ச்சியடைந்தான்.

''போயிட்டு வாங்க. நான் இஸ்ரவேல் ராஜாவுக்கு கடிதம் தருகிறேன்'' என்றான். கூடவே பலகோடி ரூபாய் மதிப்புள்ள பொன், வெள்ளி, பட்டாடைகள் போன்றவற்றையும், பணியாளர்களையும் கொடுத்து அனுப்பி வைத்தான்.

நாகமான் இஸ்ரவேல் ராஜாவிடம் சென்று கடிதத்தைக் கொடுத்தான். இஸ்ரவேல் ராஜா கடிதத்தைப் பிரித்தான்.

''என் ஊழியக்காரன் நாகமானை உம்மிடம் அனுப்புகிறேன், அவனுடைய குஷ்டரோகத்தைச் சுகமாக்குங்கள்'' என்று எழுதப்பட்டிருந்தது. ராஜா அதிர்ந்தான்.



குஷ்டரோகத்தைக் குணப்படுத்துவதென்பது இயலாத காரியம் என்பது ராஜாவுக்குத் தெரிந்தது. வேண்டுமென்றே சீரிய மன்னன் தன்னை வம்புக்கு இழுப்பதாய் நினைத்தான். தனது ஆடைகளைக் கிழித்தான்.

''நானென்ன தேவனா? உயிரைக் கொடுக்கவும், எடுக்கவும் என்னால் முடியுமா? சீரிய ராஜா என்னோடு போரிட காரணம் தேடுகிறானா?'' என்று கோபத்தில் கத்தினான்.

தீர்க்கதரிசி எலிசா இதைக் கேள்விப்பட்டார். மன்னனுக்கு ஆள் அனுப்பினார்.

''ஏன் ஆடைகளைக் கிழிக்கிறீர்? அவனை என்னிடம் அனுப்புங்கள்'' என்றார்.

ராஜா நாகமானை எலிசாவிடம் அனுப்பினார். குதிரைகள், தேர், செல்வங்கள் என சீரிய படைத்தலைவன் கம்பீரமாக தீர்க்கதரிசி எலிசாவின் வீட்டு வாசலின் முன்னால் நின்றார். எலிசா வெளியே வரவில்லை. அவரை வரவேற்கவில்லை. வாழ்த்து சொல்லவில்லை. உள்ளே இருந்துகொண்டு ஒரு ஆளை அனுப்பி,

''நீ போய் யோர்தானில் ஏழுமுறை மூழ்கினால் உன் உடல் நலம் பெறும்'' என்று சொல்லச் சொன்னார்.

நாகமான் கடும் கோபமடைந்தார். ''அவர் வெளியே வந்து, தேவனைக் கூவியழைத்து, குஷ்டரோகம் கண்ட இடத்துக்கு மேலே கைகளை அசைத்து எனக்கு சுகம் கொடுப்பார் என நினைத்தேன். நான் சகதியாய்க் கிடக்கும் யோர்தானில் மூழ்க வேண்டுமாம். எங்க நாட்டில் ஓடும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னா, பர்பார் நதிகளெல்லாம் யோர்தானை விட ஆயிரம் மடங்கு நல்லது'' என்று கோபத்துடன் கத்திவிட்டு திரும்பிச் செல்லத் தொடங்கினார்.

அப்போது அவருடைய வேலைக்காரர்கள் அவரிடம் சென்று ''எம் தகப்பனே'' என பாசமாய் அழைத்துப் பேசினார்கள்.

''ஒருவேளை தீர்க்கதரிசி கடுமையான ஒரு வேலையைச் செய்யச் சொல்லியிருந்தால் நீர் செய்திருப்பீர் அல்லவா. அதே போல இந்த எளிய செயலையும் செய்யுங்கள்'' என்றார்கள்.

நாகமான் அவர்கள் பேச்சுக்கு மரியாதை கொடுத்தான். யோர்தான் நதிக்குச் சென்றான். நதியில் மூழ்க ஆரம்பித்தான். ஒன்று.. இரண்டு.. மூன்று.. ஏழாவது முறை மூழ்கி எழுந்தபோது அவன் கண்ணை அவனால் நம்பவே முடியவில்லை. அவனுடைய நோய் முழுமையாய் நீங்கி விட, சின்னப் பிள்ளையின் தோலைப் போல அவன் உடல் மாறியது.

உடனே எலிசாவிடம் ஓடி வந்தான். அவனுடைய கர்வம் எல்லாம் போயிருந்தது.

''இஸ்ரவேலைத் தவிர எங்கும் தேவன் இல்லை என்பதை உறுதியாய் அறிந்து கொண்டேன். தயவு செய்து என் அன்பளிப்புகளை வாங்கிக் கொள்ளுங்கள்'' என வேண்டிக் கொண்டான்.

எலிசாவோ எதையும் வாங்காமல் அவரை அனுப்பி வைத்தார். போகும் போது, இஸ்ரவேல் நாட்டின் மண்ணை அள்ளிக் கொண்டு போன நாகமான் சொன்னார், ''இனிமேல் இஸ்ரவேலின் தேவனே என் தேவன். வேறு தேவனை வழிபடமாட்டேன்!''

நாகமானின் கதை சில படிப்பினைகளை நமக்குத் தருகிறது. எதிர்பார்ப்புகளின்றி அந்த அடிமைச் சிறுமியைப் போல பிறருக்கு உதவும் மனம் நமக்கு இருக்க வேண்டும்.

கர்வத்தைக் கழற்றி வைத்துவிட்டு ஆற்றில் இறங்கிய போது தான் நாகமான் நலமடைந்தான். தேவனின் அருளைப் பெற கர்வத்தைக் கழற்றுதல் அத்தியாவசியம்.

நலமடைந்த பின் நாகமான் எந்தத் தயக்கமும் இன்றி தேவனை மகிமைப்படுத்துகிறான். தேவனின் பெயரை அறிக்கையிட தயங்காத மனநிலை வேண்டும்.

# படைத்தலைவன் நாகமான்
## தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக.

**யோர்தான்**
**எலிசா**
**நாகமான்**
**குஷ்டரோகம்**
**இஸ்ரவேல்**
**படைத்தலைவன்**



**சீரியா**
**தீர்க்கதரிசி**
**ராஜா**
**கேயாசி**
**ஆப்னா**
**பர்பார்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ப் | னா | இ | யா | எ | ப | சி | ரோ | டை |
| யா | தீ | நா | லி | டை | கு | டை | ன் | ப | லி |
| ரா | ர் | யோ | ர் | தா | ன் | த் | தீ | ர் | ஷ் |
| ஜா | க் | கு | எ | இ | க | த | நா | பா | யா |
| சி | க | ஷ் | சீ | ரி | யா | லை | க | ர் | ன் |
| லி | த | ட | ன் | க் | லி | வ | மா | எ | எ |
| இ | ரி | ரோ | யா | க | ன் | ன் | ன் | சி | லி |
| எ | சி | க | வ | கே | யா | சி | ப | இ | சா |
| க | சி | ம் | இ | ஸ் | ர | வே | ல் | யா | சி |

# யோனா

‘என்ன இது.. இப்படித் தூங்கிக் கொண்டிருக்கிறாயே... விஷயம் தெரியாதா உனக்கு? கப்பல் உடையப் போகிறது. நாமெல்லாம் சாகப் போகிறோம்...’ கீழ்த்தளத்திலிருந்த மாலுமிகளில் ஒருவர் யோனாவை எழுப்பினார்.

‘கப்பல் உடையப் போகிறதா? ஏன்?’ யோனா பதட்டமானார்.

‘ஏனென்று தெரியவில்லை. காலநிலை நன்றாகத்தான் இருக்கிறது. பயணமும் பழகிய வழியில் தான் போகிறது. ஆனாலும் இந்த எதிர்பாராத கடல் கொந்தளிப்பு நிற்கவில்லை. என்னவென்று தெரியாமல் எல்லோரும் குழம்பிப் போயிருக்கிறோம்’ அவர் சொல்ல, யோனாவுக்கு பயம் வந்தது. தேவன்தான் தம்மைத் துரத்துகிறார் என்பது அவருக்குச் சட்டென விளங்கியது.

மாலுமி பயணிகளைப் பார்த்து, ‘இந்தக் கொந்தளிப்பு சாதாரணமானதல்ல என்றே நினைக்கிறேன். இந்தக் கப்பலில் இருப்பவர்கள் யாரோ பெரிய தப்பு செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதனால் தான் இந்தக் கடல் கொந்தளிப்பு. உண்மையைச் சொல்லுங்கள் யார் அது?’ என்று கேட்டார்.

யோனா மௌனமாய் இருந்தார்.

‘சரி.. நீங்கள் யாரும் பேசப் போவதில்லை. எனவே நாம் எல்லோருடைய பெயரையும் எழுதி சீட்டுக் குலுக்கிப் போடுவோம். யாருடைய பெயர் வருகிறதோ அவரே தப்பு செய்தவர்’ மாலுமி சொன்னார். பயணிகள் அமைதியானார்கள்.





அதன்படி எல்லோருடைய பெயரும் எழுதப்பட்டன. சீட்டுகள் ஓரிடத்தில் கொட்டி குலுக்கப்பட்டு ஒரு சீட்டு எடுக்கப்பட்டது. எல்லோரும் பதட்டமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாருடைய பெயர் வரப் போகிறதோ என்று ஒவ்வொருவரும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அமைதியாய் இருந்தார்கள்.

மாலுமி எடுத்த சீட்டை வாசித்தார்.

'யோனா'

மாலுமி யோனாவை அழைத்தார், 'யோனா! உன்னுடைய பெயர் தான் வந்திருக்கிறது. உன்னால் தான் எங்களுக்கு மிகப்பெரிய சோதனை வந்திருக்கிறது என நினைக்கிறோம்... நீ யார்? உண்மையைச் சொல்' என்றார்.

யோனா நடுங்கினார். 'உண்மையைச் சொல்லிவிடுகிறேன். என் பெயர் யோனா. சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவன் என்னை நினிவே நகருக்குப் போகச் சொன்னார். நான்தான் அவரிடமிருந்து தப்பி ஓடுகிறேன்' என்று உண்மையைச் சொன்னார்.


'தேவனிடமிருந்து தப்ப முடியுமா மூடனே... உன்னை இப்போது என்ன செய்வது?' மாலுமி கோபத்தில் கத்தினார்.

'என்னைக் கடலில் எறிந்து விடுங்கள்...' யோனா கூறினார்.

'உன்னைக் கடலில் எறிந்தால் கொந்தளிப்பு நின்று விடுமா? ஒரு அப்பாவியைக் கொன்ற பழி என்மேல் வராதா' மாலுமி கேட்டார்.

'வராது. என்னைக் கடலில் எறிந்து விடுங்கள். கொந்தளிப்பு கண்டிப்பாக நிற்கும்' யோனா மீண்டும் கூறினார்.

மாலுமி யோனாவைப் பிடித்துக் கடலில் தள்ளினான். கடல் திடீரென அமைதியாயிற்று! கப்பலிலிருந்த ஒட்டு மொத்த மக்களும் ஆச்சரியத்தாலும், பயத்தாலும் அமைதியானார்கள்.



யோனாவின் தேவனுக்கு பலி செலுத்தினார்கள். கடலுக்குள் விழுந்த யோனாவை தண்ணீர் தலைகீழாகப் புரட்டி, ஆழ்கடலில் தள்ளியது. ஆழ்கடலில் பாசிகளில் சிக்கிய யோனா மரணம் தன் கை தொடும் தூரத்தில் வந்துவிட்டது என்பதை அறிந்து ‘தேவனே... காப்பாற்றும்’ எனக் கதறினார். அப்போது ஒரு பெரிய மீன் வந்து அவரை முழுசாய் விழுங்கியது!

யோனா... மீனின் வயிற்றுக்குள் கிடந்தார். மரணம் சம்பவிக்கவில்லை என்பதை அறிந்த யோனா, எல்லாம் தேவனின் செயல். இனிமேல் தான் தேவனின் வார்த்தைகளை மீறக்கூடாது என முடிவெடுத்தார்.

‘தேவனே... என்னை சாவிலிருந்து விடுவியும். நான் உம் வழியை விட்டு விலக மாட்டேன். உம் கட்டளைகளைக் கடைபிடிப்பேன்’ என யோனா மீனின் வயிற்றுக்குள்ளிருந்தே வேண்டுதல் செய்தார்.

மூன்று நாட்களுக்குப் பின் அந்த மீன் அவரைக் கரையில் துப்பியது!

யோனா தான் உயிர்பிழைத்ததை அறிந்து மகிழ்ந்தார்.

நினிவே நகருக்கு ஓடினார்.

நினிவே நகர வீதிகள் எங்கும், ‘இன்னும் நாற்பது நாட்களிலே நினிவே அழிக்கப்படும்’ என்று அறிவித்தார்.

தொடரும்...

17ஆம் பக்கத்தின் விடைகள்

## சுத்தமான நாகமான் – பதில்கள்

1. சீரியா, 2. குஷ்டரோகம், 3. எலிசா, 4. ஏழு, 5. ஆப்னாவும் பர்பாரும்,
6. கேயாசி, 7. இஸ்ரவேல், 8. சிறுபிள்ளையின் மாம்சத்தைப்போல,
9. இரண்டு தாலந்து வெள்ளி, இரண்டு பைகளில் இரண்டு மாற்று வஸ்திரங்கள்,
10. தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான்.



# உசாரய்யா உசாரு...

தேவனுடைய இராஜ்ஜியம், கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும். அந்த வலையானது நல்ல மீன்களையும், கெட்ட மீன்களையும் இழுத்து வருகிறது. நல்லவை கூடையில் சேர்க்கப்படும், கெட்டவை வெளியே கொட்டப்படும் என இயேசு ஒரு முறை பரலோகத்தைக் குறித்து உவமை ஒன்றைச் சொன்னார். அதை இன்றைய இணைய வலையோடும் ஒப்பிடலாம்.

இணைய வலையானது டிஜிடல் தகவல்களை சகட்டு மேனிக்கு அள்ளிக் கொண்டு வந்து கொட்டுகிறது. அவற்றிலிருந்து நல்லவற்றைப் பொறுக்கி கூடையில் வைக்க வேண்டும், கெட்டவற்றை வெளியிலே கொட்ட வேண்டும். அப்போது அந்த வலை பயனுள்ளதாய் இருக்கும். அதை விட்டு விட்டு, நல்லவற்றை நிராகரித்து விட்டு தீயவற்றைத் தேர்ந்தெடுக்கும் போது வலையானது நமது கழுத்தை இறுக்கும் சுருக்காக மாறிவிடுகிறது.

காலங்கள் கடந்தாலும் சோதனைகள் தீர்வதில்லை. ஒவ்வொரு காலத்திலும் சாத்தான் தனது சோதனையை வேறு வேறு விதமாகத் தந்து கொண்டே இருப்பான். ஆதியில் பழத்தைக் காட்டி ஏவாளை வசீகரித்த சாத்தான், இன்றைக்கு இணைய தளத்தைக் காட்டி இளைஞர்களை இழுக்கப் பார்க்கிறான்.

ஒன்று மட்டும் மனதில் கொள்ள வேண்டும். சாத்தானால் சோதனைகளைத் தர மட்டுமே முடியும், அதில் விழுவதா இல்லையா எனும் முடிவு நம்மிடமே இருக்கிறது. பழத்தைச் சாப்பிடும் ஆசையை சாத்தான் தூண்டினான், ஏவாள் விழுந்தாள். பாவத்தை அரவணைத்தாள். கல்லை அப்பமாய் மாற்றிச் சாப்பிட இயேசுவின் ஆசையைத் தூண்டினான். இயேசு நிமிர்ந்தார், புனிதத்தை தேர்ந்தெடுத்தார். அது தான் வித்தியாசம். சோதனைகளின் வசீகரத்தில் வழுக்கிவிட்டால், ஆன்மிக முதுகெலும்பு உடைந்து போகும் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய தொழில்நுட்ப உலகில் அனைத்துமே இணைய இழைகளால் இறுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே இணையத்தைத் தவிர்த்துவிட்டு வாழ்ந்தல் என்பது ஏறக்குறைய சாத்தியமற்ற நிலை என்று கூடச் சொல்லலாம். இந்த சூழலில் கவனமாக வாழவேண்டியது நமது தேவை. எப்படி இயேசு அழைத்தபோது, ‘‘வலைகளை விட்டு

விட்டு'' இயேசுவை சீடர்கள் பிந்தொடர்ந்தார்களோ, அது போல நாம் 'இணைய வலையை' விட்டுவிட்டு இயேசுவைப் பின்செல்லத் தயாராய் இருக்க வேண்டும்.

எல்லாவற்றிலும் நன்மையும் தீமையும் இரண்டறக் கலந்தே இருக்கின்றன. நன்மையைப் பற்றிக் கொள்வதும், தீமையை விட்டுச் செல்வதும் நமது கையில் தான் இருக்கிறது. இயேசு ''வலப்பக்கமாக வலைகளை வீசுங்கள்'' என்றார். வலப்பக்கம் என்பது விண்ணகத்தின் பக்கம். வலப்பக்கமாய் வீசும் வலை என்பது நல்ல விஷயங்களைப் பெற்றுக் கொள்ள இணையத்தைப் பயன்படுத்துதல் என்றும் புரிந்து கொள்ளலாம்.

இணைய தளத்தைத் தவிர்த்தல் சாத்தியமற்ற இன்றைய சூழலில் எப்படியெல்லாம் இணையத்தை நல்லமுறையில் பயன்படுத்தலாம் என்பதைப் புரிந்து கொள்வது பயனளிக்கும்.

**1. கலைகளை வளர்க்கலாம்:** முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நமது கலைகளை வளர்த்தெடுக்க இணையம் நமக்கு வாய்ப்புகளைத் தருகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு இசைக்கலைஞன் எந்த ஒரு இசைக்கருவியையும் வாங்காமலேயே பாடல்களுக்கு இசையமைக்க முடியும். செலவில்லாமலேயே பாடி ஒரு பாடலை தரமான முறையில் உருவாக்கவும் முடியும்.

எழுத்தாளர்கள் தளங்களை ஆரம்பித்து தங்கள் சிந்தனைகளை எழுதி வைக்கலாம். ஓவியர்கள் டிஜிடல் ஓவியங்களை அழகாக உருவாக்கலாம். பாடகர்கள் தங்களுடைய குரலை பதிவேற்றி அங்கீகாரம் பெறலாம். இப்படி எந்த ஒரு கலையையும் வளர்க்கலாம். இந்த கலைகளையெல்லாம் இறைவனுடைய மகிமைக்காகச் செய்யும் போது அவை அர்த்தம் பெறும்.

**2. சிந்தனைகளைப் பகிரலாம்:** இன்றைக்கு இணையதளத்தை மிகவும் பாசிட்டிவாகப் பயன்படுத்தும் ஏராளமான இளைஞர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக யூடியூப் சேனலை எடுத்துக் கொண்டால், நிறைய கிறிஸ்தவ படைப்புகள் சார்ந்த தளங்கள் இருக்கின்றன. நம்முடைய சிந்தனைகளை வீடியோவாகப் பதிவுசெய்து வைக்கும்போது அவை சர்வதேச அளவில் மக்களுக்குப் பயனளிக்கின்றன. தொலைக்காட்சியைப் போல, 'ஆன்லைன் தொலைக்காட்சிகள்' உருவாக்குவதும் எளிதாகியிருக்கிறது. இவையெல்லாம் இளைஞர்கள் தங்களுடைய சிந்தனையை நல்ல முறையில் காட்சிப்படுத்த உதவும்.

**3. தொடர்பில் இருக்கலாம்:** நண்பர்களோடும், உறவினர்களோடும், ஆசிரியர்களோடும், ஆன்மிக வழிகாட்டிகளோடும் எப்போதும் தொடர்பில் இருப்பதற்கு இன்றைக்கு இணையம் உதவுகிறது. முன்பு இத்தகைய வசதிகள் இல்லை. நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ தான் தொடர்பு கொள்ள முடியும் எனும் நிலை இருந்தது. இந்த தொடர்பு விஷயத்தை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை வைத்தே நன்மையும் தீமையும் முடிவு செய்யப்படுகிறது. தேவையற்ற அரட்டைகளில் மூழ்கி, டிஜிடல் வெளிச்சத்தில் நாளெல்லாம் புதைந்து கிடந்தால் நமது வாழ்க்கையும், ஆரோக்கியமும் பாழாகிவிடும்.

இப்படி இணைய தளங்களை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு நமக்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. இணைய தளங்கள் இன்றைக்கு இறை தளங்களாகவும் இருக்கின்றன, சாத்தானின் தளங்களாகவும் இருக்கின்றன. எதை நாம் தெரிந்தெடுக்கிறோம் என்பதில் இருக்கிறது நமது பயணத்தின் வெற்றி.

இணைய தளங்களை நாம் பயன்படுத்தும்போது ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்போம். இந்த இணைய தளத்தை நானும் இயேசுவும் ஒன்றாக அமர்ந்து பார்க்க முடியுமா? ''முடியும்'' என நீங்கள் தைரியமாகச் சொல்ல முடிந்தால் அந்தத் தளத்தைப் பாருங்கள். இல்லையேல் தவிர்த்து விடுங்கள். நீங்கள் பாவத்தில் விழ மாட்டீர்கள்.

# எங்கள் பேங்க் அக்கவுண்ட் நம்பர்!

நாங்கள் Bank of Baroda வங்கியில் இரண்டு கணக்குகள் வைத்துள்ளோம். செக் அல்லது டிராப்ட் என்னுடைய பெயருக்கு எடுத்து அனுப்புவதாக இருந்தால், எங்களது அலுவலக முகவரிக்கு ரிஜிஸ்டர் தபால் அல்லது கொரியர் மூலமாக அனுப்புங்கள். வங்கிக் கணக்கின் (Account) விபரம்:

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49 510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

## அன்றன்றுள்ள அப்பம் வாசகர்களுக்கு!

### ஏலிம் சபைக்கு காணிக்கை அனுப்ப!

ஏலிம் சபைக்கு காணிக்கையோ, தசமபாகமோ அனுப்ப கர்த்தர் உங்களை ஏவுவாரானால், கீழ்க்கண்ட வங்கிக் கணக்குகளை பயன்படுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
ACCOUNT NO. : 49510100000230

ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
ACCOUNT NO : 49510100003063
BANK NAME : BANK OF BARODA
IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
BRANCH : KODAMBAKKAM
CHENNAI - 600024

**ELIM - GOOGLE PAY : 98848 77607**


நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்
யோசுவா 24:15
Elim GRC
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
குடும்ப ஆசீர்வாத
ஜெப நேரம்
தினமும் காலை 10 மணி முதல் 12 மணி வரை
உங்களுடைய குடும்பத்திற்காகவும்,
உங்களுடைய தேவைகளுக்காகவும்,
உங்களுடைய பிரச்சனை மற்றும்
போராட்டங்களுக்காகவும்
ஜெபங்கள் ஏறெடுக்கப்படும்.
PASTOR
OSBORNE
JEBADURAI
இந்த ஜெபத்தில் நீங்கள் நேரடியாக வந்து கலந்துகொண்டு
தேவ ஆசீர்வாதத்தை பெற்றுகொள்ளுங்கள்
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.


Elim
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
அதிகாலையில்
பரிசுத்த
ஆவியானவரோடு
◆ அதிகாலை ஜெபம்
◆ அதிகாலை ஆராதனை
◆ அதிகாலை ஸ்தோத்திரபலி
தினமும் காலை
மணிமுதல் 5:00
6:00 மணிவரை
நேரடியாக கலந்துகொண்டு பரிசுத்த
ஆவியானவரின் ஆசீர்வாதத்தை
பெற்றுக்கொள்ளுங்கள்.
Pastor
OSBORNE
Jebadurai
ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
#.50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் - 24
+919003067777,+919884908777,+919884916777







If undelivered please return to:


## Elim Glorious Revival Church

**#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India**
**for 24x7 Prayer 91-9444322200, 9444322211**
**Email: enquiry@elimgrc.com, website : www.elimgrc.com**